இரு மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு உடனடி உதவிகள்!

முதல்வரின் கருணை உள்ளம்: குடும்பத்தினர் நெகிழ்ச்சி - நன்றி!

சென்னை, மே 10

+2 தேர்வில் சாதித்த மாற்றுத்திறனாளி மாணவர்கள் இருவருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கருணை உள்ளதால் உடனடி உதவிகள் கிடைத்துள்ளது.

கிருஷ்ணகிரி - மாணவர் கீர்த்திவர்மா

நாகை - மாணவர் ஆனந்தன்

+2 தேர்வு முடிவுகள் 8.5.2025 அன்று வெளியானது. இதில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஜினூர் பகுதியைச் சேர்ந்த கீர்த்தி வர்மா என்ற மாணவர் அரசுப் பள்ளியில் படித்து தேர்வில் 471 மதிப் பெண்கள் பெற்று சாதித்துள்ளார். இவருக்கு சிறு வயதில் மின்சாரம் தாக்கி இரு கைகளையும் முழங்கைக்கு கீழ் இழந்தவர். உதவியாளர் ஒருவரின் உதவியுடன் +2 தேர்வில் சாதனை புரிந்த கீர்த்தி வர்மாவிடம் இரு கைகள் இல்லாத ஏக்கம் இருந்து வந்தது.

தேர்வு முடிவு மகிழ்ச்சியில் கீர்த்தி வர்மா முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கோரிக்கை வைத்தார். அதாவது முதல்வர் அவர்கள்தான் தனக்கு கைகொடுக்க வேண்டும் என்று கண்ணீருடன் கூறியிருந்தார்.

இதனை அறிந்த முதல்வர் அவர்கள் “கண்ணீர் வேண்டாம் தம்பி!” என தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டதுடன், உடனடியாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை தொடர்புகொண்டு அந்த மாணவனுக்கு கைகள் கிடைக்க உரிய நடவடிக்கை எடுத்திட அறிவுறுத்தினார்.

இதனையடுத்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாணவர் கீர்த்தி வர்மாவை சென்னைக்கு வரவழைத்து அவருக்கு அளிக்க வேண்டிய சிகிச்சை முறை குறித்து மருத்துவக் குழுவுடன் ஆலோசனை நடத்தி அந்த மாணவனுக்கு இரு கைகள் கிடைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேபோன்று நாகை மாவட்டத்தைச் சேர்ந்த கண் பார்வை குறைபாடு உள்ள மாணவர் ஆனந்தன் கணினி வழியே +2 தேர்வு எழுதி 486 மதிப்பெண்கள் பெற்று அசத்தியுள்ளார். இவரது திறமையை அறிந்து முதல்வர் அவர்கள் அந்த மாணவனுக்கு உதவிட கழக நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து மாவட்டச் செயலாளர் நிவேதா முருகன் எம்.எல்.ஏ. கழக நிர்வாகிகளுடன் அந்த மாணவர் இல்லம் சென்று கணினியுடன் ரூ.50 ஆயிரம் நிதி உதவியும் செய்து முதல்வர் அவர்கள் சார்பில் மாணவர் ஆனந்தனுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

முதல்வர் அவர்களின் உடனடி உதவிக்கு மாணவர்களின் குடும்பத்தினர் நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துள்ளனர்.

சென்னை, கிண்டி, காந்தி மண்டபத்தில் நேற்று (09.05.2025) சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.வே.ராஜாராமன், துணை மேயர்மு.மகேஷ்குமார்,செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ், ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

நாடு போற்றும் நான்காண்டுதொடரட்டும் பல்லாண்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் அவளூர் ஊராட்சியில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஒன்றிய செயலாளர் க. குமணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், கழக இளம் பேச்சாளர் சிலம்பரசன், இ.அசோகன் ஒன்றிய கழக நிர்வாகிகள் த. கன்னியப்பன், டி.எல். தயாளன், ந.வீரராகவன், முனியம்மாள், ராஜகோபால், கோ. கமலக்கண்ணன், ஏகே. பரசுராமன், தொ. தட்சிணாமூர்த்தி, வே. திருநாவுக்கரசு, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் க. இளமது, ஒன்றிய குழுதுணைத் தலைவர். திருமதி. திவ்யப்பிரியா இளமது, ஒன்றியக் குழு உறுப்பினர் சங்கரி குமார். ஊராட்சி மன்ற தலைவர் சித்ரா பாபு, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.